**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**----**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM**
**DATE: 19.06.2024**

**Case No : CC 3 / 2020**

**Deposition of Witness : P.W. 5**

| | |
|---|---|
| **Name:** திரு.லூயிஸ் லாரன்ஸ் | **Caste:** |
| **Father / Husband Name:** | **Calling:** |
| **Village:** | **Religion:** |
| **Taluk:** | **Age:** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 19.06.2024**

முதல் விசாரணை:

நான் ராஜாக்கமங்கலம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த 2022 அக்டோபர் மாதம் பணிஓய்வு பெற்று தற்போது வடசேரியில் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது தட்டார்மடம் காவல்நிலையத்தில் பொறுப்பு உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது 11.10.2019 ம் தேதி இரவு 22.00 மணிக்கு தட்டார்மடம் கா.நி சிறப்பு உதவி ஆய்வாளர் திரு சுயம்புலிங்கம் என்பவர் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த இண்டிமேசன் பெற்று 23.00 மணிக்கு அங்கு சென்று சிகிச்சையிலிருந்த படுக்கப்பத்து கீழத்தெரு, ஆறுமுகபாண்டி மனைவி, ஞானபகவதி வயது 65/19 என்பவரின் காயத்தகவல் பெற்று விசாரணை செய்து நடந்த சம்பவத்திற்கு புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து 16.10.2019 ம் தேதி அதிகாரை 01.00 மணிக்கு புகார் வாக்குமூலத்தித்ன தன்மைப்படி தட்டார்மடம் கா.நி கு.எண்.130/2019 ச/பி 294(பி),324, 506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து என் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த மேற்படி வழக்கு கோப்பை எடுத்துக் கொண்டு 16.10.2019 ம் தேதி காலை 7.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிவகுருநாதன், நடேச ஆதித்தன் ஆகியோர் முன்பு சம்பவ இடம் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து வையார்களிடம் சாட்சி வாக்குமூலம் பெற்றும் சாட்சிகள் 1 முதல் 5 வரையானவர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடி வந்த நிலையில் 23.10.2019 ம் தேதி CrlMP 9105/19 ன்படி எதிரி கனம் நீதிமன்றத்தில் சரண்டராகி பிணையில் சென்றதால்

கைது செய்யவில்லை. பின்னர் 15.11.2019ம் தேதி சாட்சி 8 மருத்துவரை விசாரித்து வாக்குமூலத்துடன் கூடிய காயச்சான்று பெற்றேன். என் விசாரணையிலும் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் சம்பவம் உண்மை என தெரிய வந்தததால் எதிரிமீது ச/பி 294(பி),324, 506(2) இதசவின் கீழ் குற்றப்பத்திரிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆகவும், பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், ப.சா.1 புகார்தாரரின் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**)

குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. முறையாக விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in the open court to the presence of the Accused Read over to the witness and admitted by him to be correct.

(S/d)Tmt.C.Kalaiyarasi Reena
Judicial Magistrate,
Sathankulam.